களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் சோதனைகள், உழவர்களுக்கும் அந்தப் பகுதிக்கும் பயனுள்ள தகவலை அளிக்கும் : பல ஐயங்களையும் அவசரமாகக்கொண்ட தவறான கருத்துக்களையும் தெளிவாக்கும்.

நொய்யல் வடி நிலப்பகுதியில் துளைக் கிணறுகள் இறக்கப்படுவதால் அருகிலுள்ள பகுதிகளிலுள்ள கிணறுகள் வறண்டுவிடுமென்ற அச்சம் அடிப்படையற்றதாகும்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் பதிலில் கோவை நகரத்திற்குக் குடி தண்ணீர் கொடுப்பதற்காகக் கிணறுகள் போடப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அமைச்சரவர்களும், அதிகாரிகளும் மற்றுமுள்ள முனிசிபல் கவுன்சிலர்களும் கூடிய குழுவில் ஆராயப்பட்டு, அந்தப் பகுதியில் குழாய்க் கிணறுகள் போடுவதால், அந்தப் பகுதி பாதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இதைக் கைவிடலாம் என்ற அபிப்பிராயம் கோவை நகரில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கந்தான் பெறலாம். இரண்டொரு கேள்விகள்தான் போடலாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : மன்னிக்கவேண்டும். இந்த அரசாங்கத்தின் ஆணைப்படி விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது என்பதை ஆராய்ந்துபார்க்க கலெக்டர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பதில் இல்லை. அதற்கான காரணம் என்ன ? அமைச்சரவை ஒரு திட்டத்தை போட்டபிறகு, அதற்கு மாறாக அமல் செய்திருப்பின் அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அமைச்சரவையில் முடிவு குமாரசாமி, செல்வசிந்தாமணி ஏரிகளில் துளைக்கிணறு போடவேண்டும் என்பது. அதோடு மாடம்பட்டி, மாதவபுரம், இருட்டுப்பள்ளம் இங்கெல்லாம் போடப்படும் கிணறுகள் சோதனைக்கிணறுகள்தான். இதில் நீர் கிடைக்கும்போது, அது விவசாயிகளுக்குப் பெருந்துணையாகத்தான் இருக்குமேயல்லாது, அது பாதகமாக இருக்காது. அப்படிப்பட்ட அச்சம் ஆதாரமற்றது. விவசாயிகளுக்கும். சாகுபடிக்கும் குந்தகம் ஏற்படாது.

(ஆ) தென்னார்க்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி நகரப் பஞ்சாயத்தில் குடி தண்ணீர் வழங்கல்.

திரு. என். ராஜாங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் வட்டம், குறிஞ்சிப்பாடி நகரப் பஞ்சாயத்து எல்லையில் சுமார் 12 ஆயிரம் மக்கள் வசிப்பதால் அந்நகரப் பஞ்சாயத்துக்குட்பட்ட இரண்டு "போர்" கிணறுகளும், மற்றுமுள்ள நீர்த் தேக்கங்களும், தண்ணீர் இல்லாமல் வறண்ட காரணத்தால், குடிதண்ணீருக்கு பஞ்சம் ஏற்பட்டதை நீக்கி, மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்துதர வேண்டும்."

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி ஊராட்சிக்காக நீர் வழங்குத் திட்டம் எதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கவில்லை. இந்த ஊராட்சிக்காக நீர் வழங்குத்திட்டம் எதையும் மேற்கொள்ளும் செயற்குறிப்புத் தற்போதைக்கு இல்லை. நகர நீர் வழங்கு, கழிவு நீர் அகற்றுத் திட்டங்களுக்காக நான் காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 12·50 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யக்கருதப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கத்தில் பெரும் பகுதி மூன்றுவது திட்டத்தில் முழுவதும்

நிறைவேற்றப்படாது. எஞ்சி நிற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் நிதிப் பற்றுக்குறை காரணத்தால், குறிஞ்சிப்பாடி ஊராட்சிக்காக நீர்வழங்குத் திட்டமொன்றை நான்காவது திட்டக்கால அளவில் மேற்கொள்ள இயலாது.

திரு. என். ராஜாங்கம் : தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி நகரப் பஞ்சாயத்துத் தகராறு காரணமாக, கோர்ட்டில் வழக்குகள் இருப்பதால், எந்தத் திட்டத்தையும் செய்யமுடியவில்லை. அதிகாரிகள் இஷ்டம் போல் செய்ய முடியவில்லை. மக்களுக்குத் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க, கலெக்டர் மூலமாகவாவது தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஊராட்சி மன்றங்களேதான் தண்ணீர் வினியோகம் செய்ய வேண்டும். அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டால், அவர்களே அவற்றைத் தீர்த்துக்கொள்ள முயற்சிகள் செய்ய வேண்டும். அதற்காக அரசாங்கம் திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுவது சரியில்லை. ஊராட்சி மன்றத்திற்கே வசூல் செய்யவும், பணிகளைச் செய்யவும் அதிகாரம் இருக்கிறது. அதில் அரசாங்கம் எந்த விதமான முடிவும் எடுக்க முடியாது.

திரு. என். ராஜாங்கம் : தலைவர் அவர்களே, கோர்ட்டில் வழக்குகள் இருப்பதால், அதிகாரிகளுக்கு அதிகாரம் இருந்தாலும், எதுவும் செய்யமுடியாமல் இருக்கிறது. ஆகவே, கலெக்டருக்கு இந்த விஷயத்தை விளக்கி, அவர் மூலமாகவே ஏதாவது செய்ய வேண்டும் என்பதுதான் கோரிக்கை. பஞ்சாயத்தில் நிதி இருக்கிறது, அப்படியிருந்தும் அதை எடுத்துச் செலவுசெய்ய அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதைக் கவனிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வை. சுவாமிநாதன் அவர்களும், திரு. கருப்பையா அவர்களும் தங்கள் தங்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

6. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் மசோதா

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : Sir, I beg to move :

'That leave be granted to introduce the Tamil Nadu Practitioners of Homoeopathy Bill, 1969.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : I introduce the bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.